<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ID.No. | : | 251/2019 | சாட்சியம் | : | MW3 |
| Name | : | திரு.ஞானசேகரன் | | | |
| Date | : | 18.04.2026 | | | |
| Time | : | 10.42 a.m to 12.03 p.m | | | |

<u>நி.த.சா.3.திரு.ஞானசேகரன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

Manufacturing Engineering துறையின் பணி என்ன என்றால் கம்பெனிக்கு ஏதாவது புதிய Drive Shaft Business வரும் போது Capacity demand உள்ளதா என பரிசோதிக்க வேண்டும், தேவைப்படும்போது புதிய இயந்திங்கள் வாங்க வேண்டும். புதிய தொழிற்நுட்பம் அறிமுகப்படுத்தும் போது அதற்கு தேவையான தொழிற் நுட்பங்களை குறித்து ஆராய வேண்டும், அதனை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும், புதிய இயந்திரங்களை எந்த இடத்தில் நிறுவ வேண்டும் என ஆராயந்து செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாதமும் தேவைக்கு ஏற்ப Man power எவ்வளவு தேவைப்படும் என கணக்கிட்டு உற்பத்தி துறைக்கு தெரியப்படுத்த வேண்டும், தினமும் லைங்களில் உற்பத்தி. தரம், பாதுகாப்பு

சம்மந்தப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். Manufacturing Engineering துறையில் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட தொழிலாளர் யாரும் வேலை செய்யவில்லை என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படுவது எங்கள் நிறுவனம் சம்மந்தப்பட்ட Microsoft outlook ல் யார் யார் எந்தெந்த துறையில் வேலை பார்கிறார்கள் யார் யார் link செய்யப்பட்டுள்ளார்கள் என்பதற்கான விவரம் ஆகும். பிரசாந்த் என்ற Operation Executive அவர்கள் பெயர் கொண்ட அந்த விவரமானது அது தொ**.**சா**.**ஆ**.49**. என் பெயருடன் கூடிய அந்த விவர பட்டியலானது தொ**.**சா**.**ஆ**.50** ஆனால் மேற்படி ஆவணங்கள் இரண்டும் Official ஆவணங்கள் இல்லை. மேற்படி ஆவணங்கள் நிறுவனத்தில் பராமரிக்கப்படும் ஆவணம் என்றால் இல்லை. தொ**.**சா**.**ஆ**.50** ஆவண விவர பட்டியலை யார் பராமரிக்கிறார்கள் என்றால் HR துறையில் IT பிரிவில் பராமரிக்கிறார்கள் அந்த ஆவணம் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அந்த ஆவணம் என்னுடைய சொந்த மெயில் ஐடீ யில் பராமரிக்கப்படுகிறது என்றால் இல்லை. என்னுடைய Mail ID Access HR துறையிடம் உள்ளதா என்றால் என்னுடைய outlook Mail ID யை என்னாலும் IT பிரிவாலும் Access செய்யமுடியும் ஆனால் தொ**.**சா**.**ஆ**.49,50** ல் உள்ள Mail ID யை என்னால் Access செய்ய இயலாது. தொ**.**சா**.**ஆ**.49, 50** ஆவணத்தில் கண்டுள்ள அனைத்து விவரங்களையும் அனைத்து தொழிலாளர்களும் பார்வையிட முடியும் என்றால் ஆமாம். ஆனால் அதில்

என்னாலும் தொழிலாளர்காளும் எந்த வித மாற்றமும் செய்ய முடியாது. நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பார்த்தேன். நி.சா.**2** மூலம் மனுதாரர் தொ.சாஆ.**47,48** ஆவணங்களை குறியீடு செய்த விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. என்னுடைய பிரமாண வாக்கு மூல சாட்சிய்தை யார் தயார் செய்தார்கள் என்றால் கம்பெனியின் Legal பிரிவில் தயார் செய்தார்கள். அதில் உள்ள விவரங்கள் சம்மந்தமாக என்னிடம் கலந்து ஆலோசித்தார்கள். தொ.சாஆ.**47,48** ஆவணங்கள் சம்மந்தமாக நி.சா.**2** தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புக்கொண்டு இருப்பதால் அந்த ஆவணத்தில் குறை இருப்பபதாக என்னுடைய சாட்சியத்தில் சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல. தொ.சாஆ.**47,48** ஆவணம் பற்றிய விவரங்கள் மனுதாரர் தவறாக சொல்லப்பட்டுள்ளதாக என்னுடைய சாட்சியத்தில் சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல. நி.சா.**2** ன் சாட்சியத்தில் உள்ள குறைகளை பூர்த்தி செய்வதற்காக என்னுடைய சாட்சியம் இருக்கும் காரணத்தினால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எதிருரையை படித்து பார்த்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூல சாட்சியம் பத்தி 1 முதல் 3 வரை கண்டுள்ள விவரங்கள் எதிருரையில் இல்லை என்றால் சரியல்ல. எதிருரை பத்தி9ல் சொல்லப்பட்டுள்ளது. எதிருரை பத்தி9ல் பட்டியல் எதுவும் இல்லை. எதிருரையில் மனுதாரர் தொழிற்சங்கமானது

தொழிலாளர்களின் பெயர் பட்டியலை தரவில்லை என சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிருரையில் இந்த வழங்கு 32 தொழிலாளர் சம்மந்தப்பட்டது என சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். இந்த 32 தொழிலாளர்களை தவிர எங்கள் நிறுவனத்தில் வேறு யாராவது Team Leader ஆக வேலை பார்த்து வருகிறார்களா என்றால் வருகிறார்கள். வழக்கு சம்மந்தப்பட்ட 32 தொழிலாளர்களை தவிர வழக்கு தாக்கல் செய்த தேதியில் எத்தனை Team Leader கள் இருந்தார்கள் என்றால் சுமார் 5 பேர் இருந்தார்கள். இன்றைய தேதியில் வழக்கில் சம்மந்தப்பட்டவர்களை தவிர 13 Team Leader கள் உள்ளனர். என்னுடைய சாட்சியம் பத்தி2,3 ல் கண்டுள்ள நபர்கள் இந்த வழக்கில் சம்மந்தப்பட வில்லை என தெரிவித்து நிர்வாகத்திற்கு கடிதம் எதுவும் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுதுள்ளார்கள் அதை தாக்கல் செய்யவில்லை. அது போன்று கடிதம் எதுவும் மனுதாரர் சங்கத்திற்கு தரவில்லை என்றாலும் தவறான சாட்சியத்தை முன் வைக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சதிஷ்குமார், பிரபு ஆகியோர் Executive ஆக இருக்கிறார்கள். செப்டம்பர் 2014 வரை எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்த்தேன். 2015-2016 ல் நான் வேலை பார்க்கவில்லை என்றால் செப்டம்பர் 2016 ல் மீண்டும் வேலையில் சேர்ந்தேன். செப்டம்பர் 2014 முதல் செப்டம்பர் 2016 இடைப்பட்ட காலத்தில் நிறுவனத்தில் என்ன நடந்தது என

எனக்கு தெரியாது என்றால் அந்த காலகட்டத்தில் பணி புரிந்த சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மூலமாகவும் ஆவணம் அடிப்படையிலும் தெரிந்து கொண்டேன். இந்த விவரத்தை என்னுடைய சாட்சியத்தில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. பிரமாண வாக்கு மூலம் பத்தி 6,7,8,9 சொல்லி உள்ள விவரங்களுக்கு ஆதாரமாக அத்தாட்சி தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஒரு சில ஆவணங்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. Log book, QRC சம்மந்தப்பட்டவை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. Team Leaders தான் man power Allocation செய்ய வேண்டும் என எழுத்து மூல உத்தரவு வழங்கப்பட்டதா என்றால் அவர்களுக்கான Roles and Responsibilities-ல் சொல்லப்பட்டுள்ளது. எங்கள் நிறுவத்தில் மேற்பார்வையாளர் என்ற பதவி உள்ளதா என்றால் அந்த கால கட்டத்தில் இருந்தது. மேற்பாவையாளரின் பணி தன்மை என்ன என்றால் இரண்டு, மூன்று உற்பத்தி பொருட்களில் பொறுப்பாளராக இருப்பார். அடுத்து எந்த மாடல் தேவை உள்ளது என பார்ப்பார். அது சம்மந்தப்பட்ட தகவல்களை Supply Chain Management யிடம் தெரிவித்து விட்டு Team Leaders களுக்கு Forward செய்வார். வாக்கு மூலம் பத்தி 5ல் மேற்பார்வையாளர் தான் 4-5 Cell-களுக்கு பொறுப்பாளர் என சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். வழக்கில் சம்மந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு எந்தெந்த Cell ஒதுக்கப்பட்டது என குறிப்பிட்டு உத்தரவு வழங்கப்பட்டதா என்றால் அவ்வாறு

வழங்கப்படாது. Team Leader என மட்டும் குறிப்பிட்டு வழங்கப்படும். எந்த தொழிலாளர் வேண்டுமாலும் எந்த Cell க்கு வேண்டுமாலும் பணி அமர்த்தப்படலாம். நி.சா.ஆ.**211** ல் ஆனந்த ராஜ் தான் Trainer என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவரின் கையொப்பம் உள்ளது. அந்த ஆவணத்தில் ஆனந்த் ராஜின் கையொப்பம் இல்லை என்றாலும் அந்த ஆவணத்தில் ஆனந்த் ராஜின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும் போலியான ஆவணம் என்றாலும் தவறு. நி.சா.ஆ.**207** எந்த தேவைக்காக பெறப்பட்டது என சொல்லப்பட்டுள்ளதா என்றால் New user Account என சொல்லப்பட்டுள்ளது. அந்த படிவமானது எங்கள் நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் Outlook Account-க்கானது என்றால் ஆமாம். Outlook Account என்பது எங்கள் நிறுவனத்தில் பணி புரியும் அனைத்து பணியாளர்களுக்கும் உள்ளது என்றால் இல்லை. Production Department ல் Team Leader, Value stream Manager, Value stream Leader ஆகியோருக்கு மட்டும் இருக்கும். மற்ற Department ல் வேறு சிலருக்கும் இருக்கும். ஆப்ரேட்டர்களுக்கு இருக்காது. என்னிடம் காட்டப்படுவது தொ.சா.ஆ.**49,50** ல் உள்ளது போன்றதா என்றால் என்னிடம் காட்டப்பவது உரிய ஆவணம் இல்லை. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அதனை Access செய்வதற்கான email ID எதுவும் இல்லை. என்னிடம் காட்டப்படுவது எங்கள் நிறுவனம் மனுதாரர் தொழிற்சங்கத்திற்கு

20.01.2017 அன்று அனுப்பிய கடிதம் என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.**51**. ஈஸ்வரன் என்ற Team Leader என் கீழ் வேலை பார்க்கிறார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படுவது நான் அவருக்கு email மூலம் அனுப்பிய காரணம் கேட்கும் அறிவிப்பு என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.**52.** மேற்படி ஆவணத்தில் மாதிரி நிலையாணை அடிப்படையில் Team Leader க்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மாதிரி நிலையாணை தொழிலாளர்களுக்கு மட்டும் தான் பொருந்தும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த விவரம் தெரியாமல் தான் காரணம் கேட்கும் அறிவிப்பு அனுப்பட்டதா என்றால் அது சம்மந்தமாக மனித வள துறைக்கு தான் தெரியும். எங்கள் கம்பெனியில் Direct Employees, Indirect employees யார் என்றால் Direct Employees ல் Operator, Team leader வருவார்கள். Indirect employees ல் maintenance operator / Technicians, Executives, Senior Executives, Value stream leaders, Value stream managers, managers ஆகியோர் வருவார்கள். மற்ற துறையில் வேலை பார்ப்பவர் Indirect employees ஆவார்கள். எங்கள் நிறுவனத்தில் Direct Employees, Indirect employees பாலிசி விவரம் தெரியுமா என்றால் மனித வள துறைக்கு தான் தெரியும். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட

தொழிலாளர்கள் அனைவரும் Direct Employees என்பதால் தொழிலாளர் என்ற வகையின் கீழ் வருவார்கள் என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/- S.Sujatha
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:18.04.2026.